முன்னேற்றக் கழகம் அந்தத் திருத்தத்தை ராஜ்ய சபாவிலே, மாநிலங்கள் அவையிலே, எதிர்த்து இருக்கிறது, இதை நான் ஆளுங்கட்சிக்கு அல்ல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு நினைவு படுத்தி இந்த அளவில் என்னுடைய உரையை முடிக்கிறேன்.

10. அரசினர் தீர்மானம்.

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, இன்று பகல் 12-30 மணி அளவில் பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவைக்குள் துண்டு பிரசுரம் வீசி குரல் எழுப்பிய (1) திரு. அப்புக்குட்டன், மற்றும் (2) திரு. அனந்தபத்மநாபன் ஆகியோரின் செயல் கண்டிக்கத்தக்கதும், அவையை அவமதிப்பதும் ஆகும். எனவே இது குறித்து தீர்மானத்தை முன்மொழியும்படி மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

இன்று, 9-9-1978, பகல் 12-30 மணியளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டறிக்கைகளை பேரவைக்குள்ளே வீசி எறிந்து, குரல் எழுப்பிய காரணத்தால் காவலில் வைக்கப்பட்டுள்ள அம்பத்தூரைச் சேர்ந்த திரு. ராமன் குட்டி என்பவரின் மகன் திரு. ஆர். அப்புக்குட்டன். என்று கூறிக்கொள்பவரும், அம்பத்தூரைச் சேர்ந்த திரு. சங்கரன் என்பவரின் மகன் திரு. அனந்தபத்மநாபன் என்று கூறிக்கொள்பவரும் பெருங் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெருங் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது. அவர்கள் இருவரும் ஏழு நாட்கள் வெறுங்காவல் தண்டனை (Simple imprisonment) அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்றும் இப்பேரவை தீர்மானிக்கிறது.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, 7 நாட்கள் சிம்பிள் இம்பிரிசன்மெண்ட் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நேற்று இதே மாதிரி சம்பவம் நடைபெற்ற போது நேற்றும் குரல் எழுப்பப்பட்டது, துண்டுப் பிரசுரம் போடப்பட்டது, நேற்றைக்கு நான் புரிந்துகொண்டவரைக்கும் நேற்றைய தினம் சாயங்காலம் வரைக்கும் தான் தண்டனை என்று. இன்றைக்கும் அதே மாதிரி நடந்திருக்கிறபோது - அதே நபர் அல்ல, அதே நபராக இருந்தால் புரிந்துகொள்ளலாம்—வேறு நபர் அப்படிச் செய்கிறபோது 7 நாட்கள் சிம்பிள் இம்பிரி

1978 செப்டம்பர் 9] [திரு. ரா. உமாநாத்]

சன்மெண்ட் என்று சொல்வது பாகுபடுத்துவது ஆகும். தீர்மானத்தை வைத்திருக்கிறார்கள், அதை எதிர்ப்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. இந்த அவையே பாகுபடுத்தி நடத்து கிறது என்ற முறையிலே அப்படிப்பட்ட இம்பரஷனை, இமேஜை வெளியே இருக்கக்கூடிய மக்களுக்கு ஏற்படுத்தும், இந்தத் தீர் மானத்தைத் திருத்தினால் நான் ஏற்றுக்கொள்கிறேன், இல்லா விட்டால் என் கட்சியின் சார்பாக நான் இதை எதிர்க்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நம்முடைய மன்றத்தில் இப்படிப்பட்ட முறைகள் ஏற்கத்தக்கவையல்ல. ஆனால் இந்த முறைகளை மேற்கொண்டவர்கள் இந்த மன்றத்திலே மிக முக்கியமான இடங்களில் இன்றைக்கு வீற்றிருக்கிறார்கள். நேற்றைய தினம் நம்முடைய அவை முன்னவர் அவர்கள் முன் மொழிந்தபோது அதை அனைவரும் ஆதரித்தோம். ஆனால் தொடர்ந்து இதே காரியம்—மாலை 5 மணி வரைக்கும் தானே நமக்குத் தண்டனை, மாலை 5 மணிக்கு மேல் நாம் வீட்டுக்கு செல்லலாம்—என்ற முறையிலே இதே மாதிரி நடைபெற்றுக் கொண்டிருப்பது முறையானதல்ல, அனுமதிக்கத்தக்கதும் அல்ல.

[பிற்பகல் 1-20.]

இன்று துண்டு நோட்டீஸ் விழும், நாளை வேறு ஏதாவது விழும். ஆகவே, இதை ஆளுங்கட்சி கொண்டுவந்த தீர்மானம் என்று எடுத்துக் கொள்ளாமல் அனைவருக்கும் ஏற்புடைய ஒன்று என்ற அளவிற்கு நம்முடைய மாண்புமிகு முன்னவரவர்கள் என்னுடைய கருத்துக்களையும், திரு. உமாநாத் அவர்களின் கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டு, இந்த ஏழு நாட்கள் என்பதை மூன்று நாட்கள் என்று குறைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிந்த பொழுது எனக்கு ஏற்பட்ட உணர்வுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று திரு. உமாநாத் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நேற்றைக்கு நடந்த சம்பவத்திற்கு மாலை ஐந்து மணி வரை என்று தண்டனை விதித்துவிட்டு, அதே குற்றத்தைச் செய்த அவர்கள் அல்ல வேறு நபர்களுக்கு ஏழு நாட்கள் தண்டனை வழங்குவதா என்று கேட்டு, இப்படிப் பிரித்துப் பார்ப்பது நல்லது அல்ல என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பிரச்னை அதுவல்ல.

பிரச்னை, நமது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எடுத்துச் சொன்னபடி நேற்றைக்கு ஐந்து மணியோடு இந்த விஷயம் முடிந்துவிட்டது என்ற உணர்வைப் பெற்றுக் கொண்டு இருக்கின்ற நண்பர்கள் தொடர்ந்து, ஐந்து மணியோடு விட்டு விடுவார்கள் என்று கருதிகொண்டு இந்தக் காரியத்தில் முழு மூச்சோடு பல்வேறுபட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் ஈடுபடுவார் களேயானால் இந்த அவை எங்கே சென்று நிற்கும்? இதற்கு

எப்படிப்பட்ட ஒரு முடிவு கிடைக்கும்? கடமைகளை நாம் எப்படி ஆற்றப் போகிறோம்? சில பேர்களுக்காக வாதாடுவதை நான் கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் அவையை அவமதிக்கும் அளவிற்கு நடைபெறுகின்ற பயங்கரமான இப்படிப் பட்ட குற்றங்களைக் கண்டிப்பதற்கு நாம் தயங்கவே கூடாது, அப்படிக் கண்டிப்பதற்கு நாம் தயங்கி, அவர்களுக்குப் பாது காப்பு அளிக்கின்ற முயற்சியில் ஈடுபடுவோமேயானால் நிச்சயமாக இந்தக் குற்றம் புரிபவர்கள் மேலும் ஊக்கம் பெற்று இந்தக் காரியத்தில் ஈடுபடுவதற்கு அது வழிவகையாக அமைந்துவிடும் என்பதை உமாநாத் அவர்களுக்குச் சொல்லி, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும் பொழுது, பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவில் என்னென்ன சலுகைகளைக் கைதிகளுக்கு வழங்க வேண்டுமென்பதைப்பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள், அதை அப்படியே நான் ஏற்றுக்கொண்டு பேசுகிறேன் என்று அருள் கூர்ந்து கருதிவிடாதீர்கள்; அவரது கருத்து முதலமைச் சருக்குத் தெரிவிக்கப்படும், அந்த உணர்வோடு நான் ஒன்றுகின்ற நேரத்தில் காம்ப்ரமைஸ் ஃபார்முலாவாக, ஏழு நாட்கள் என்பதை மூன்று நாட்களாகக் குறைத்து, அந்த மூன்று நாட்கள் வெறும் காவல் தண்டனை விதிக்க வேண்டுமென்று நான் முன்மொழிவதை அவை வரவேற்க வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன் உள்ள கேள்வி: "இன்று 9-9-1978, பகல் 12-30 மணியளவில சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டறிக்கைகளை பேரவைக்குள்ளே வீசி எறிந்து, குரல் எழுப்பிய காரணத்தால் காவலில் வைக்கப்பட்டுள்ள அம்பத்தூரைச் சேர்ந்த திரு. ராமன் குட்டி என்பவரின் மகன் திரு. ஆர். அப்புக்குட்டன் என்று கூறிக்கொள்பவரும், அம்பத்தூரை. சேர்ந்த திரு. சங்கரன் என்பவரின் மகன் திரு. அனந்தபத்மநாபன் என்று கூறிக் கொள்பவரும் பெருங் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச் செயல் பேரவையை அவமதிக்கும் பெருங்குற்றம் என்று இப் பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் இருவரும் மூன்று நாட்கள் வெறுங்காவல் தண்டனை (Simple Imprisonment) அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென்றும் இப்பேரவை தீர்மானிக்கிறது."

தீர்மானம் திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவர்னர் உரை மீதான பொது விவாதத்தில் இறுதிக் கட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12 ஆம் தேதி மாலை 4 மணி அளவில் பதில் உரைப் பார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 1978ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11-ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-23 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் : இல்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்:

28. மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. கி. மனோகரன் அவர்கள் 1978ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 8ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 1978-79 ஆம் ஆண்டின் முதலாம் துணை மதிப்பீடுகளை அளித்து ஆற்றிய உரை. (தமிழ்—ஆங்கிலம்).

*29. 1978—79 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ்—ஆங்கிலம்).

*30. 1978—79 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகள் பற்றிய அறிவிப்பு (தமிழ்—ஆங்கிலம்).

---

*8—9—1978 அன்று பேரவைமுன் வைக்கப் பெற்றது.